பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

மலர்: 20 கார்த்திகை 12 ஆவணி மாதம் 26 இதழ்: 288
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 28-11-78

## "ஈழத்தில் ஏற்பட்ட இயற்கை அழிவு:

சென்னை. நவ. 27

ஈழத்தில், சூறாவளி, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக திராவிட முன்னேற்றக் கழகம் பத்தாயிரம் ரூபாவை அனுப்பி வைத்துள்ளது.

தி. மு. க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி இன்று சென்னையில் விடுத்த அறிக்கையில் ஈழத்தில் ஏற்பட்டிருக்கும் இயற்கைக் கொடுமை கண்டு தமிழக மக்கள் நெஞ்சுருகுகின்றார்கள் என்றும், உலகில் தமிழர் எங்கெங்கு வாழ்கின்றார்களோ, அங்கெல்லாம் வாழும் தமிழ் மக்கள் தங்களால் இயன்ற உதவிகளை இலங்கைக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்றும் அன்புக் கோரிக்கை விடுத்துள்ளார்.

## உலகத் தமிழர் உதவவேண்டும்"

### கலைஞர் கோரிக்கை; ரூபா 10 ஆயிரம் உதவி

UNIVERSITY OF SRI LANKA ... PERIODICALS DIVISION ... LIBRARY

### உருக்குலைந்திருக்கும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு

# துரிதமாக உணவு விநியோகம்

# வெள்ளநிலைமை சீரடைகிறது!

## குடும்பத்துக்கு 500 ரூபா

### சர்வதேச ஸ்தாபனங்கள் தாராள உதவி

(கொழும்பு)

சூறாவளியினாலும், வெள்ளத்தினாலும் அடையாளம் காணமுடியாத நிலைக்கு உருக்குலைந்துள்ள மட்டக்களப்பில், வெள்ளநிலைமை இப்பொழுது சீரடைந்து வருகிறது. அரசாங்கம் மேற்கொண்ட துரித நடவடிக்கைகளைத் தொடர்ந்து, நிலைமை ஓரளவு திருந்தி வருவதாக நேற்றிரவு இங்கு கிடைத்துள்ள செய்திகள் தெரிவிக்கின்றன.

வீடிழந்து, உடையிழந்து, உண்ண உணவும் இழந்து தவிக்கும் மக்களுக்கு கடந்த 24 மணி நேரத்தில் விநியோகிக்கப்பட்ட பதினேழாயிரம் ருத்தல் உணவுப் பொட்டலங்கள் மூலம் ஓரளவு ஆறுதல் கிடைத்துள்ளது, கூடாரங்களும் போர்வைகளும், அத்தியாவசிய மருந்து வகைகளும் மட்டக்களப்பு நோக்கி விமானம் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

நேற்றிரவுவரை கிடைக்கப்பெற்ற கடைசிச் செய்திகள்:

சூறாவளி, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களில் இப்பொழுது நிலைமை சீரடைந்து வருகிறது, சடந்த 24 மணிநேரத்தில் பதினேழாயிரம் உணவுப் பொட்டலங்கள் விமானம் மூலம் விநியோகிக்கப்பட்டன.

### உடனடி நிதி உதவி

பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்துக்கும் குறைந்தபட்சம் ஐநூறு ரூபா வழங்கப்படுகிறது. இதனுடன் இலவச உணவும் வழங்கப்பட்டு வருகிறது.

உணவுப் பொருள்கள் தங்கு தடையின்றி நேர்மையான முறையில் சகலருக்கும் கிடைக்க, மட்டக்களப்பு அரசாங்க அதிபர், பொலிஸ் அதிபர் ஆகியோரின் நேரடி கண்காணிப்பில் அரச மற்றும் பொது ஸ்தாபன அதிபர்களின் ஒத்துழைப்புடன் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

உணவு கூட்டுறவுத்துறை அமைச்சரின் உத்தரவின் பேரில்

(6-ம் பக்கம் பார்க்க)

### ரயில் சேவைகள்

(கொழும்பு)

நேற்று இரவு புகையிரதப் பகுதியினர் விடுத்த அறிக்கையின்படி,

காங்கேசன்துறை-அனுராதபுரம், காங்கேசன்துறை-மன்னார், நாவலப்பிட்டி-பண்டாரவளை, கொழும்பு-நம்புக்கலை கொழும்பு-மாதம்பை, திருக்கோணமலை-கல்லோயா வரை ரயில் சேவைகள் இன்று நடைபெறும்.

### வேலியே பயிரை மேய்ந்தது!

(மட்டக்களப்பு)

உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, படுக்கப்பாயின்றி, இருக்க இல்லமுமின்றி அநாதைகளாக, ஒருநேர உணவுக்காக ஆகாய விமானங்களை ஆயிரக்கணக்கான மக்கள் அண்ணார்ந்து பார்த்துக் கொண்டிருக்கையில், இங்கு வேலியே பயிரை மேய்ந்திருக்கிறது!

மட்டக்களப்பிலுள்ள இரண்டு கூட்டுறவுக் கடை முகாமையாளர்கள், 'வெந்தவீட்டில் பிடுங்கியது மிச்சம்' என்று கருதி, தங்களது கூட்டுறவுக் கடைகளிலேயே சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கொள்ளையடித்துள்ளனர்.

இந்தவிஷயம் உடனடியாக பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து இந்த இரண்டு கூட்டுறவுக்கடை முகாமையாளர்களும் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## யாழ். - கொழும்பு பஸ்சேவை

### தினசரி 4 பஸ்கள்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் நாட்டில் ஏற்பட்ட சூறாவளி வெள்ளத்தினால் நிறுத்திவைக்கப்பட்ட அரசேவை பஸ்சேவைகளில் யாழ்ப்பாணம் — மட்டக்களப்பு தவிர்ந்த சேவைகள் இப்பொழுது நடைபெறுகின்றன.

கொழும்புக்கான ரயில் சேவை துண்டிக்கப்பட்டுள்ளதால், யாழ்ப்பாணம்— கொழும்பு பஸ்சேவைகளை அதிகரித்திருப்பதாக யாழ்ப்பாண டிப்போவைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் எமது நிருபரிடம் நேற்றிரவு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து இன்றுகாலை 7-30 மணிக்கு ஒரு பஸ்ஸும். காலை 9-00 மணிக்கு இரண்டு பஸ்களும், மாலை 6-00 மணிக்கு இன்னொரு சேவையுமாக யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு மொத்தம் நான்கு சேவைகள் நடைபெறுகிறது.

அனுராதபுரத்துக்கு காலை 7-30 மணி, மாலை 5-30 மணி, 7 மணிக்கு பஸ்சேவைகள் நடைபெறும்.

மற்றைய வழமையான சேவைகளில் மாற்றமில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. [கெ]

## இளைஞர் பேரவையினர்க்கு அவசரக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்குடா நாட்டிலுள்ள இளைஞர் பேரவையின் சகல பொதுச்சபை உறுப்பினர்களையும் உடனடியாக ஸ்ரான்லி வீதியிலுள்ள தலைமைச்செயலகத்திற்கு வருமாறு அவசரத் தந்திமூலம் இளைஞர் பேரவை மூலம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

தமிழ் இளைஞர் பேரவையின் அமைப்புச் செயலாளர் த சந்ததியார் தந்திமூலம் இந்த அவசர அழைப்பை விடுத்துள்ளார்.

பாதிக்கப்பட்ட கிழக்கிலங்கை மக்களின் நிவாரணப் பணிக்காக கடல்மார்க்கமாக நேற்று முன்தினம் பயணமான தொண்டர்படையின் முதலணி மட்டக்களப்பைச் சென்றடைந்துவிட்டதாகத் தலைமைச்செயலகத்திற்கு தகவல் கிடைத்துள்ளதாக அறியப்படுகிறது.

[6-ம் பக்கம் பார்க்க]

### வழக்குகளின் பதிவேடுகள் நாசம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்திலும் மேல் நீதிமன்றத்திலும் இருந்த வழக்குகளின் பதிவேடுகள் யாவும் புயலினாலும் வெள்ளத்தினாலும் அழிந்துவிட்டன.

இதுபற்றி மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் நீதியமைச்சுக்கு அறிவித்துள்ளது.

## யாழ். வளாக மாணவர் மட்டுநகர் சென்றனர்

(கோண்டாவில்)

புயல் நிவாரணப் பணியின் பொருட்டுயாழ்.வளாகத்தைச் சேர்ந்த மட்டக்களப்பு மாணவர்களுடன் மற்றும் இடங்களைச் சார்ந்த மாணவர்களும் சென்றனர்.

இக்குழுவில் பெண்களும் இடம்பெற்றுள்ளனர். முக்கியமாக இதில் அடங்கிய பெண்கள் மட்டக்களப்புப் பகுதியைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் இலங்கைப் போக்குவரத்துச்சபையின் விசேஷ பஸ்ஸில் சென்றனர்.

இது தவிர மற்றொரு பகுதியினர் எதிர்வரும் புதன்கிழமை புறப்படவுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

## குற்றச்சாட்டிலிருந்து கொப்பேகடுவ விடுதலை

### ஜனாதிபதி ஆணைக்குழு முடிவு

(கொழும்பு)

முன்னாள் காணி விவசாய அமைச்சர் திரு. ஹெக்டர் கொப்பேகடுவ நீதி சேவையில் தலையிட்டார் என்ற குற்றச்சாட்டிலிருந்து விசேட ஜனாதிபதி ஆணைக்குழு நேற்று விடுவித்து தீர்ப்பு வழங்கியது.

திரு. கொப்பேகடுவ மீது சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ஆணைக்குழுவின் உத்தரவுப்படி திரு. கொப்பேகடுவ ஆணைக்குழுவுக்கு அளித்த விளக்கத்தை ஏற்றுக்கொண்ட பின்னரே மேற்கண்ட தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது.

அரசியல் அமைப்பு நீதிமன்றத்திலிருந்து ராஜினாமாச் செய்யாவிடின் தமது பதவியிலிருந்து நீக்கிவிடப்போவதாக தமமைத் தொலைபேசியில் பயமுறுத்தினர் என்று முன்னாள் நீதியரசர் திரு எச். தெதரகே ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்தார்.

இதை அடுத்தே ஆணைக்குழு திரு கொப்பேகடுவவை இம் மாதம் 22ந்திகதி தம்முன் ஆஜராகுமாறும் அதற்குமுன் இம் மாதம் 16ம் திகதி விளக்கமளிக்குமாறும் உத்தரவிட்டிருந்தது

திரு கொப்பேகடுவ தம்மீது சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுகள் தொடர்பாகநேற்று அளித்திருந்த விளக்கத்தைப் பரிசீலித்தபின்னரே ஆணைக்குழு அவர்மீதான குற்றச்சாட்டிலிருந்து அவரை விடுவித்

(6-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

''நீம் சுகாதார தூபம்'' வேம்பினின்றும் நவீன முறையில் தயாரிக்கப்பட்ட நீம் சுகாதார தூபம் வீட்டிலுள்ள நுளம்பு, இலையான், பூச்சி, புழு ஆகியவற்றை நீக்கி நறுமணம் கமழச் செய்கின்றது. மில்க்வைற்-யாழ்ப்பாணம்
0883

30 ஏக்கர் தென்னந்தோட்டம் விற்பனைக்கு உண்டு எழுதுமட்டுவாழ் கிளாலி றோட்டில், விபரங்களுக்கு 36, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
090

### தேவை

கரம்பன் கிழக்கில் இருக்கும் பாக்கியம் வைத்தியசாலைக்கு அரசாங்கத்தில் அல்லது தனியார் மருத்துவ மனையில் கடமைஆற்றி ஓய்வுபெற்ற உதவி வைத்தியர் (Apo-thecary) உடனடியாகத் தேவை. தோட்டப்பகுதியில் கடமையாற்றியவராக இருந்தாலும் விரும்பத்தக்கது. விலாசம்: பாக்கியம் வைத்தியசாலை, கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறை.
0905

### கமிஷனுக்கு

உரிமையாளர் வெளிநாடு செல்லவேண்டியிருப்பதால் யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள ஒருதியேட்டர் கமிஷனுக்குக் கொடுக்கப்படும் அல்லது குத்தகைக்குக் கொடுக்கப்படும் விண்ணப்பிக்கவும்: விளம்பர இல: 0906, மே/பா, ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம்
0906


# "தமிழருக்குக் கிடைத்த இறைமை"

## அமரர் 'திரு' கொண்டிருந்த கருத்துப் பற்றிசட்டத்தரணி விளக்கம்

(யாழ்ப்பாணம்)

''தமிழ் மக்கள் மீண்டும் பெற்ற இறைமையை உபயோகித்து தம்மைத்தாமே ஆழவேண்டும். இது எவராலும் மறுக்க முடியாத உரிமை. இக்கோரிக்கையை நாட்டுப் பிரிவினையென்றோ தனி நாடு கோருவதென்றோ சொல்வது பிழை. எமது நாடு இருக்கிறது, எமது இறைமை அந்நியர்வசமிருந்து எமக்கு திரும்பிவந்துவிட்டது. அதைப் பிரயோகிக்கப்பாகிறோமா என்பது தான். கேள்வி இக்கருத்தையே அமரர் திருச்செல்வம் சட்ட ஆதாரங்களுடன் ரயல்-அட்-பார் வழக்கில் தெட்டத்தெளிவாக நிரூபித்தார். இவ்வாதத்தை சட்டமா அதிபரால் கூட மறுக்க முடியவில்லை''

இவ்வாறு நேற்று முன்தினம் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பணிமனையில் நடைபெற்ற அமரர் திருச்செல்வம் நினைவுதினக் கருத்தரங்கில், சட்டத்தரணி இ. பாலசுப்பிரமணியம் குறிப்பிட்டார். கருத்தரங்குக்கு முன்னை நாள் மாநகரசபை மேயா டாக்டர் அ. செ. தர்மலிங்கம் தலைமை வகித்தார்.

திரு. இ. பாலசுப்பிரமணியம் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது: வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஸ்திரமான ஆட்சி நடைபெறுவதால் 1972ஆம் அரசியல் சட்டம் செல்லுபடியாகும் என்றும் மட்டுமே அவரால் வாதாட முடிந்தது. இந்தக் காரணத்திற்காக அரசியல் சட்டம் செல்லுபடியாகும் என ஒரு நீதிமன்றம் தீர்க்கமுடியுமென்றால் அதே நீதிமன்றம் இந்நாட்டில் சர்வதேச சட்டம் செல்லுபடியாகுமென்பதை ஒப்புக்கொண்டே தீரவேண்டும் அப்படியானால் சர்வதேச சட்டப்படி தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுவதற்கு ஒப்புக்கொண்டேயாகவேண்டும்.

இந்தவிற்பூட்டை எந்தவொரு நீதிமன்றமோ, அரசோ தட்டிக்கழிக்கமுடியாது இதை ஒவ்வொருவரும் மனதில் கொண்டு அதற்கேற்ப தங்கள் திட்டங்களை வகுத்துக்கொள்ளவேண்டும்.

''தமிழ் மன்னரிடமிருந்தே 1619ல் புத்தளத்திலிருந்து மன்னார்வரையும், அங்கிருந்து கும்புக்கனை ஓயா (பாணமை) வரை பரந்திருக்க (தமிழர் இறைமை) தமிழர் இராச்சியம் போர்த்துகேயரால் பறிக்கப்பட்டதென்பதற்கும். அன்று ஒரு தமிழ் இராச்சியம் இருந்ததென்பதற்கும், சரித்திர ஆதாரங்களைக் காட்டி அமரர் திருச்செல்வம் நிரூபித்தார்.

''போர்த்துக்கேயருக்கு கோட்டை இராஜதானியின் அரசன் 1579ம் ஆண்டு ஓர் மரணசாதனம் மூலம், தனது அரசை ஒப்படைத்தான் அந்த நேரத்தில் அந்த இராஜதானியின் வடக்கெல்லையாக யாழ்ப்பாண இராச்சியம் இருந்ததென குறிப்பிடப்பட்டுள்ளது இச் சரித்திர உண்மை ''றுபைரோ'' சரித்திர ஆசிரியரால் எழுதப்பட்ட இலங்கை என்ற நூலின் 95-96ம் பக்கங்களில் காணப்படுகிறது

### பயங்கர யுத்தம்

''அதுமட்டுமல்ல 1560-ல் போர்த்துக்கேயருக்கும் யாழ்ப்பாண மன்னனுக்கும் நடைபெற்ற பயங்கர யுத்தத்தின் பின்பு, யாழ்ப்பாண இராச்சியத்திலிருந்து புத்தரின் பல்லொன்று எடுக்கப்பட்டது. அதை பாதுகாப்பிற்காக சிங்கள மக்கள் யாழ்ப்பாணத்திலுள்ள பிராமணர் வசம் கொடுக்கப்பட்டதாகக் கருதப்பட்டது இது தற்கால சரித்திரம் என்ற நூலின் 291-வது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### யாழ். மன்னன் செய்த உதவி

''அதுமட்டுமல்ல, போர்த்துக்கேயருடன் கண்டிமன்னன் போராடுவதற்கு யாழ்ப்பாண மன்னன் கண்டி மன்னனுக்கு உதவிசெய்தபடியினால் தான் போர்த்துக்கேயர் முதலில் யாழ்ப்பாணத்தை கைப்பற்றுவதற்குமுயற்சி எடுக்கவேண்டியிருந்தது. உண்மை இவ்வாறிருக்க யாழ்ப்பாணத்தில் இப்படியொரு இராச்சியம் இருந்ததில்லையென சரித்திரத்தை திரிக்க சிலர் முற்படுவது விந்தையானது.

''எமது இறைமை சட்டபூர்வமாக எமக்கு வந்துள்ளபடியால் அதனைப் பிரயோகித்து விடுதலைபெற பெரும்பான்மை வாக்குகளோ அல்லது வேறு ஒருவரின் அனுமதியோ, எமக்கு தேவையில்லை. இது ஒருவர் கேட்டு இன்னொருவர் வழங்கும் பொருளல்ல. எனவே நாம் மீண்டும் பெற்ற இறைமையை பிரயோகிக்கப் போகிறோமோ, இல்லையா என்பதுதான் கேள்வி. இதை எப்படிப் பிரயோகிப்பது என்பது தான் அடுத்த கேள்வி.

எமது மத்தியிலுள்ள பொறியியலாளர், கலாநிதிகள், விவசாயிகள், தொழிலாளர்கள், வழக்கறிஞர்கள் வேறு தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் பிற நாட்டு தமிழ்மக்களை மட்டுமின்றி இக்கோரிக்கைக்கு ஆதரவு வழங்கும், பிற இனத்தவர்களையும் உள்ளடக்கிய தமிழர் விடுதலை இயக்கம் (ரி.எல் ஓ) ஒன்றை அமைத்து அதன் மூலம் தமிழர் இறைமையை நிலைநாட்ட திரு விரும்பினார்.

''தனக்கென ஒரு நாடு இல்லாத பலஸ்தின விடுதலை இயக்கத்திற்கு, கூட்டுச்சேரா மாநாட்டில் ஒரு இடம்கிடைக்குமானால்; தனது இறைமையை மீண்டும் பெற்று தனது சொந்தநாட்டில வாழும் தமிழ்மக்களுக்கு கூட்டுச்சேரா மாநாட்டில் ஏன் இடமளிக்ககூடாது என நீதிமன்றத்தில் ''திரு'' வினா எழுப்பினார் எனவே இவ்விடயம், பற்றி தமிழ் மக்கள் அங்கு வாழ்ந்தாலும் இதற்கு வேண்டிய முயற்சி எடுப்பதன் மூலமும் எமது இறைமையை பிரயோகிக்க, நடவடிக்கை அமைப்பதன் மூலமுமே. அமரர் திருச்செல்வத்திற்கு நாம் அஞ்சலி செலுத்த முடியும்'' என்றார்.

கருத்தரங்கில் திரு. ஆர். தர்மரெத்தினமும் உரையாற்றினார். (செ)

# 'நாவலர்சேவையை இன்றைய இளைஞர் உணரவேண்டும்'

[நாயன்மார்கட்டு]

''அறுபத்துமூன்று நாயன்மார்களுக்கும் சிறப்பாகக்குருபூஜைகள் நடைபெற்ற இடமாகிய நாயன்மார்கட்டில் தமிழுக்கும் சைவத்திற்கும் அரும்பாடுபட்டவரும் அறுபத்துநான்காவது நாயன்மாராகச் சைவமக்களால் கணித்துப் பூஜிக்கப்படுபவருமான ஸ்ரீலஸ்ரீ ஆறுகநாவலருக்குக் குருபூஜை நடைபெறுதல்சாலவும் பொருத்தமுடையதாகும். நாயன்மார்கட்டிலுள்ள ஆயுர்வேத வைத்தியசாலையிலும் அதற்குஅண்மையிலுள்ள புண்ணியர்மடம் எனப்படும் இடத்திலும் இத்தகைய குருபூஜைகள் பன்னெடுங்காலம் தொடக்கம் நடைபெற்றுவந்திருக்கின்றன. இன்று புண்ணியர் மடம் அழிக்கப்பட்டுவிட்டது. ஆஸ்பத்திரியும் பலபிரச்சினைக்குள்ளாகியுள்ளது. ஆனால் நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக்கழகம் இத்தகைய குருபூஜைகளை நடத்திவருவது பாராட்டத்தக்கது'' என்று வித்துவான் க. சொக்கலிங்கம் (சொக்கன்) நாயன்மார்கட்டில் நடைபெற்ற நாவலர் குருபூஜை விழாவுக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழெங்கே சுருதி எங்கே'' என சி. வை. தாமோதரம்பிள்ளை கூறிய வாசகங்களை இன்றைய இளைஞர்கள் உற்று நோக்கவேண்டும். யாழ்ப்பாணத்திலே கிறிஸ்தவமதப்பிரசாரம் வெகுவேகமாக நடைபெற்றுக்கொண்டிருந்த நேரத்திலே ஆறுமுகநாவலர் தோன்றி சைவக்கோவில்களது சீர்கேடுகளை எழுதியதோடு மட்டுமன்றி பழையசைவசமய புத்தகங்களையும் புதுப்பித்து பதிப்பித்தும் வெளியிட்டார். நாவலர் செய்த சேவை நன்கு ஆராயப்படுவதோடு மாணவர்களுக்குப் பயன்படும்படியாக பாடப்புத்தகமாகவும் அமைய வேண்டும்''

நாயன்மார்கட்டு ராஜ ராஜேஸ்வரி அம்பாள் கோவில் சைவஅபிவிருத்திக்கழகத்தின் சார்பில் இவ்விழா நடைபெற்றது. (அ)

## இந்த வீதி திருந்துமா?

(கோண்டாவில்)

யாழ்ப்பாணம் மாநகர எல்லைக்குட்பட்ட மணல் தரைப் பகுதி வீதி மிகவும் துர்நாற்றம் கொண்டதாகவும் போக்குவரத்துக்கு இடைஞ்சல் கொண்டதாகவும் காணப்படுகின்றது. பலாலி வீதியில் இருந்து ஆரம்பிக்கும் இடத்தில் இருந்து சிவன்கோவில் செல்லும் வரை ஒவ்வொரு வீட்டின் முன்பாகவும் ஒரு குப்பை மேடாகக் கிடக்கின்றது.

இவ்வழியால் மாநகரகுப்பை லொறி கிரமம் தவறாது செல்கின்றன எனவும் ஆனால் அங்கு கிடக்கின்ற குப்பைகள் அள்ளப்படாது தொடர்ந்தும் கிடப்பதுடன் மேலும் மேலும் அதிகரிக்கின்றது எனவும் இந்நிலையில் மின்சாரம் இரவில் இல்லாத சந்தர்ப்பத்தில் போக்குவரத்து செய்பவர்கள் மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாகின்றனர் எனவும் கூறப்படுகிறது. [உ]

## திறப்புக்கோர்வை யாருடையது?

ஆஸ்பத்திரி வீதியில் ஒளவையார் சிலைக்குப் பக்கத்தில் திறப்புக்கோர்வை ஒன்று மு. இரத்தினசிங்கம் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ''ஈழநாடு'' பத்திரிகைக்காரியாலயதில் கொடுக்கப்பட்டிருக்கின்றது உரிமையாளர் பெற்றுக் கொள்ளவும்.

"புராணங்கள் படிப்பதற்கு

# திண்ணைப்பள்ளிக்கூடங்கள் கிராமந்தோறும் வேண்டும்"

-- பண்டிதமணி

[யாழ்ப்பாணம்]

''அன்னியர் ஆட்சிக்காலத்தில் நலிவுற்ற தமிழையும் சைவசமயத்தையும், மறுமலர்ச்சியடையச்செய்து புத்துணர்ச்சியூட்டியவர் நாவலர் பெருமான். அவர்தோன்றியதால்தான் தமிழும் சைவமும் நிலைபெற்றன சமயகுரவர்கள் தோன்றி சைவசமயத்தை உலகுக்கும் பரவச்செய்தனர் அவர்களுக்குப்பின் ஐந்தாங் குரவராகப் போற்றக்கூடிய தகைமைவாய்ந்தவர் நாவலர் பெருமான்''

இவ்வாறு யாழ் ரஸிகரஞ்சனசபா மண்டபத்தில் நாவலர் தர்மபாதுகாப்புச்சபையினரால் நடாத்தப்பெற்ற நாவலர் தின விழாவுக்குத் தலைமைவகித்துப் பேசிய திரு. த. சோமசுந்தரம் கூறினார்.

பண்டிதமணி இலக்கியகலாநிதி சி. கணபதிப்பிள்ளை அளித்த ஆசியுரையிற் குறிப்பிட்டதாவது:

''நாவலர் ஐந்தாண்டுத்திட்டம் இக்காலத்துக்கேற்றவாறு பயன்படுத்தப்படவேண்டும்

நாவலர் எழுதியனவும் பதித்தனவுமாகிய நூல்கள் நாவலர் வித்தியாசாலையில் விலைக்குப் பெறத்தக்கதாயிருக்கவேண்டும். வருவிக்க முடியாதவைகள் அச்சிடப்படவேண்டும்.

''கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், நாவலர் பாலபாடங்கள், சைவவினாவிடைகள் மற்றும் நீதிநூல்கள் முதலியவை படித்தற்கு திண்ணை பள்ளிகள் கிராமந்தோறும் அமைக்கப்படவேண்டும். சிறுவருப வயதுவந்தோரும் வசதியான நேரத்தில் வந்துபடிக்கத்தக்கதாயிருக்கவேண்டும் படிப்பிப்பவருக்கும் பயிற்சியளிக்க வேண்டும். ஆசிரியருக்கும் வருவாய்க்கு வழிசெய்யவேண்டும்

'நாவலர் நூற்றாண்டுவிழாச் சபையினரையும், மேற்காட்டியவைகளில் ஈடுபடச்செய்ய வேண்டும்.''

புலவர் த வடிவேல், ஆசிரியர் திரு சி. சிவரத்தினம் ஆகியோரும் பேசினர். திரு ந. சபாரத்தினம் நன்றிதெரிவித்துப் பேசினார்.

## விறகு தட்டுப்பாடு நீங்கியது

[சங்கானை]

யாழ்ப்பாணத்தில் உள்ள அரசினர் விறகு காலைகளில் என்றும் இல்லாத அளவில் விறகு தேங்கிக்கிடக்கின்றது.

வடபகுதியில் நீண்ட காலமாக நிலவிவந்த விறகுத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும்வண்ணம் பல கிராமாட்சி மன்றங்களும் பொதுஸ்தாபனங்களும் வடமாநில வனபரிபாலன அதிபா திரு பொன்னம்பலத்திடம் செய்து கொண்ட புகாரைத்தொடர்ந்து அவர் மேற்கொண்ட துரித நடவடிக்கையின் காரணமாகவே கூட்டுத்தாபனத்தின்கீழ் இயங்கும் இந்த விறகு காலைகளில் பெருமளவு விறகுகள் வந்து குவிந்து கிடப்பதற்குக் காரணம் எனக் கூறப்பட்டது.

இதே வேளையில் இப்பகுதிகளில் கட்டிடப் பொருளான பெரிய மரங்களுக்கு பெருந் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சுமார் மூன்று மாதங்களாக இந்த விறகுகாலைகளுக்கு, கட்டிடத்திற்குப் பாவிக்கும் மரங்கள் வரவில்லையாம்.


### தேவை

எமது ஸ்தாபனத்திற்கு இரும்பு வியாபாரத்தில் அனுபவம் வாய்ந்த விற்பனையாளர், கணக்குப்பதிவாளர், லொறிச்சாரதி (உள்ளூர்சேவை) சமையல்காரப்பெண் ஆகியோர் உடன்தேவை.

உரிமையாளர்,

அன்ரனிஸ் ஹாட்வெயர்ஸ்

பண்டத்தரிப்பு. 0903

ஈழநாடு
The Eelanaadu

## இயற்கை செய்த கொடுமை

நாடு சமீபகாலத்தில் கண்டிராத அளவு அழிவுகள்- உயிர்ப்பலிகள்- கொடுமைகள் நிகழ்ந்துவிட்டன.

கடந்த ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்கு வந்த கையோடு ஆகஸ்ட் கலவரம் நாட்டை அல்லோல கல்லோலப்படுத்தியது

ஆறறிவு படைத்த மனிதனுல் தனது உள்ளத்தில் கிடந்து கிளர்ந்து எழும் மிருக வெறியினை அடக்க முடியாததின் காரணமாக அந்த துர்ப்பாக்கியச் சம்பவங்களை நாம் எதிர்நோக்க நேர்ந்தது.

இந்த ஆண்டு இயற்கையின் சீற்றத்தினுல் கடந்த வாரம் நாடு அல்லோல கல்லோலத்துக்குள்ளாகியிருக்கிறது

கடந்த ஆண்டு ஏற்பட்ட நிலைமையை மனித சக்தியினுல் கட்டுப்படுத்தியிருக்க முடியும் ஆனுல் கடந்த வாரம் ஏற்பட்ட இயற்கையின் கோரதாண்டவத்தை எவராலும் கட்டுப்படுத்த முடியவில்லை- முடியவும் மாட்டாது

வங்காள விரிகுடாவில் உருவாகிய பவன அமுக்கம் சூருவளியாக உருவெடுத்து நமது நாட்டை ஒரு கலக்குக் கலக்கிக்கொண்டு இந்தியாவின் தென்கரையில் மோதி அங்கேயும் தன் கோரப்பசிக்கு இரைதேடிக்கொண்டு மேலே நகர்ந்து தணிந்திருக்கின்றது.

இனம், மதம், சாதி அந்தஸ்து என்று இயற்கை. பாகுபாடு பார்ப்பதில்லை ஏன், மனிதனுல் ஏற்படுத்தப்படும் நாடு, நகரம், என்ற எல்லைகளும்கூட அதனைக் கட்டுப்படுத்துவதில்லை.

எனவே, இந்த இயற்கையின் சீற்றத்தினுல் ஏற்பட்டுவிட்ட அழிவுகளைச் செப்பனிடுவதில் நாமும் எம்மத்தியில் நிலவும் பாகுபாடுகளையும், வேறுபாடுகளையும் மறந்தாகவேண்டும்.

கடைசியாகக் கிடைத்துள்ள தகவல்களின்படி ஏறத்தாழ 600 பேர்வரை உயிரிழந்திருக்கிறுர்கள். இலட்சக் கணக்கானவர்கள் வீடுவாசல்களை இழந்துநிர்க்கதிக்குள்ளாகித் தவிக்கிறுர்கள்.

இவர்களில் பெரும்பாதிப்புக்குள்ளானவர்களில் பெரும்பான்மையானவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர்.

பாதிக்கப்பட்டமக்களுக்கு உடனடி நிவாரணங்களைச் செய்துகொடுக்க அரசுதுரித நடவடிக்கைகளைஎடுத்துவருகின்றது மூன்று மாதங்களுக்கு இலவசஉணவு வழங்கும்படி ஜனுதிபதி உத்தரவிட்டிருக்கிறுர். இந்த மூன்று மாதங்களுக்குள் பாதிக்கப்பட்டவர்களுக்கான வீடுகளைக் கட்டிமுடிக்கவும் அவர் ஆர்வம்கொண்டுள்ளார்

இதேசமயம், நாட்டில் உள்ள சமூகநல ஸ்தாபனங்களும் நிவாரணவேலைகளில் ஈடுபட முன்வந்துள்ளன. வெளிநாடுகள் பலவும் உதவிகள் வழங்கியுள்ளன.

உறவினர்களையும் நண்பர்களையும் இழந்து தவிக்கும் மக்களுக்கு நாம்ஆறுதல்மட்டும்தான் கூறமுடியும். ஆனுல் உதவி தேவைப்படும் அனைவருக்கும் உடனடியாக அது கிடைக்கும்படி செய்வது அவசியம்.

உணவு, உடை, தங்க இடம் இவை முதல்தேவைகள். நலிவுற்றிருப்பவர்களையும், காயமடைந்தவர்களையும் மருத்துவமனைகளில் சேர்த்து சிகிச்சைக்கு வழி செய்யவேண்டும். வெள்ளத்துக்குப்பின் ஏற்படக்கூடிய தொற்று நோய்கள் பரவாதபடி கட்டுப்படுத்துவது இன்னுமொரு முக்கிய விஷயம்

துன்பமுறும் மக்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவிகளில் புல்லுருவிகளும், சுரண்டல்காரர்களும் தம் மடிகளை நிரப்பிக்கொள்ளாமல் பார்த்துக் கொள்வதும் ஒரு முக்கிய அம்சமே.

பாதிப்புற்ற பகுதிகளில் மனிதாபிமானத்துடன்பணி புரிவதற்காக பாதிக்கப்படாத பகுதிகளைச்சேர்ந்த தொண்டர் இயக்கங்கள் விரைந்து கொண்டிருக்கின்றன

போர்க்களம்போல்காட்சி அளிப்பதாகக் கூறப்படும் மட்டக்களப்புப் பிரதேசம் விரைவில் சீரடையவேண்டும் அங்கு மக்கள் முன்போல் நிம்மதியாக வாழவேண்டும் எனவும், அகால மரணங்களுக்குள்ளானவர்களின் ஆத்மா சாந்தியுற வேண்டுமெனவும் பிரார்த்திப்போமாக.



எந்தப்பணியும் அடுத்தவனுக்கு மகிழ்ச்சியோ நன்மையோ பயக்குமா என்றே யோசித்துச் செய்யவேண்டும். செய்யும் எப்பணியையும் அன்போடு செய்யவேண்டும்.

—ஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகள்

# "சிங்கள மொழி விடைத்தாள்களுக்கு சிங்களப் பேராசிரியர்களும் கூடியபுள்ளி வழங்கியிருக்கலாமே"

## — லயனல் போபகே

(யாழ்ப்பாணம்).

"தமிழ் பேசுவோரிடத்திலும், சிங்களம் பேசுவோரிடத்திலும் இன வெறியர் உள்ளனர். தமிழ்ப் பேராசிரியர்கள், தமிழ்மொழி விடைத்தாள்களுக்குக் கூடிய புள்ளிகள் கொடுத்ததாக முதலாளித்துவவாதிகள் நெடுங்காலமாகவே கூறிவருகின்றனர் இது உண்மையானுல், சிங்களப் பேராசிரியர்கள், சிங்கள மொழி விடைத் தாள்களுக்கு கூடிய புள்ளியை வழங்கியிருக்கலாம் என்ற ஒரு வினவை எழுப்பலாம்."

மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய சமிட்டி உறுப்பினர் திரு. லயனல் போபகே வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

"தமிழ்ப் பேராசிரியர்கள் அவ்வாறு கூடிய புள்ளிகள் கொடுத்திருப்பதானுல் அதைப் பற்றி ஒரு விசாரணை நடத்தி அவர்களைப் பதவியிலிருந்து விலக்க நடவடிக்கை எடுத்திருக்கலாம், இது முதலாளித்துவ வர்க்கத்தின் நிர்வாகப் பிரச்னையல்லவா? இதற்கு இவ்வகையான கூச்சல் தேவையானதல்ல. தமிழ்ப் பேராசிரியர்கள் தமிழ் விடைத்தாள்களுக்குக் கூடிய புள்ளிகள் வழங்கியிருப்பது உண்மையாக இருக்கலாம், அப்படியாயின் இதற்கான தீர்வு சனத்தொகை விகிதாசாரப்படி பல்கலைக்கழக அனுமதியா? ஒருபோதும் இதுவல்லத் தீர்வு நிச்சயமாக இது பிரச்னையை வளர்க்க உதவும். திறமையும், பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கத் தகைமையுள்ள தமிழ்மொழி பேசும் மாணவ மாணவிகள், நாட்டின் சனத்தொகையில், சிறுபான்மையோராய் இருக்கும் ஒரே காரணத்திற்காக அவர்களுக்குப் பல்கலைக்கழக அனுமதி மறுப்பது எந்த நீதியின்படியோ? நாட்டின் பெரும்பான்மையோராய் இருக்கும் காரணத்திற்காகத் தகைமையில்லாத சிங்கள மாணவரைப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிப்பதால் பிரச்னைகளுக்கு எப்படித் தீர்வுகாணமுடியும்?

"நாட்டிலுள்ள ஒரு மாணவ சமுதாயம், தமிழ் சிங்கள வேற்றுமை இல்லாமல் சமகல்வி வசதிகளைப் பெறுவதற்கும் ஆவனசெய்வதற்கும், பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கத் தகுதியுள்ள எல்லா மாணவர்களையும் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிப்பதற்கும் முதலாளித்துவ முறைக்குச் சக்தி கிடையாது. ஆகையால் முதலாளித்துவ வர்க்கம் கல்வி வசதியைக் கட்டுப்படுத்தவேண்டியுள்ளது. இதற்காக அவர்கள் தரப்படுத்தலையும், போட்டிப் பரீட்சைகளையும் நடத்துகிறுர்கள். தற்போது முதலாளி வர்க்கக் கோஷ்டியினர், சனத்தொகை விகிதாசாரட்படி தரப்படுத்தலை அமுல்நடத்த உத்தேசித்துள்ளனர். இதைச் சரிவரப் புரிந்துகொண்டு செயல்படுவது விவேகமுள்ள அனைவரது கடமையுமாகும்" (க-அ)

## 13 மாணவர்கள் இரத்ததானம்

(அரியாலை)

யாழ். பரியோவான்கல்லூரி இன்ரக்கிளப்பைச் சேர்ந்த 13 மாணவர்கள் யாழ். அரசினர் வைத்தியசாலையிலுள்ள இரத்த சேமிப்பு வங்கியில் இரத்ததானம் செய்தனர்.

இரத்ததானம் செய்தமாணவரின் முன்மாதிரியைப் பாராட்டிய இரத்த வங்கிப் பொறுப்பாளர் டாக்டர் திருமதி நடராசா. இதுபோல ஏனைய கல்லூரிமாணவர்களும் இரத்ததானம் செய்ய முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

பரியோவான் கல்லூரி இன்ரக்கிளப் தலைவர் செல்வன் அ. முரளிதரன் இரத்ததானம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். (அ)

'இணைந்து போராட வருக'

# தமிழ் இளைஞர் பேரவைக்கு

## மலையக இளைஞர் பேரவை அழைப்பு

(ஹட்டன்)

"வடக்கு கிழக்கு மாகாண தமிழ் இளைஞர்கள் இன்று தங்களுக்குச் சரியெனப் படுகின்ற கொள்கைக்காக தமது உயிரையே அர்ப்பணிக்கத் தயாராய் இருக்கின்றுர்கள். இப்படியான தியாக சிந்தையுடைய தீரமிக்க இளைஞர்களை முதலாளித்துவ தலைமைகள் தங்களின் சுயநல நோக்கத்திற்காக பயன்படுத்தியதினுலேயே அந்த இளைஞர்கள் இன்று தனியாக நின்று உரிமைப் போராட்டத்தை நடத்த முன்வந்துள்ளனர்.

தமிழ் இளைஞர் பேரவையின் இந்த முடிவை மலையக இளைஞர் பேரவை வரவேற்பதுடன் அவர்கள் வர்க்க சக்தியுடன் இணைந்து போராட முன்வரும் படியும் கேட்டுக் கொள்கின்றது.

இவ்வாறு ஹட்டன் நகர மண்டபத்தில் மலையக இளைஞர் பேரவை நடத்திய 'தேசியப் பிரச்னைகளும் மலையகத் தொழிலாளரும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கில் உரையாற்றிய பேரவை பொதுச்செயலாளர் திரு. வி. எல் பெரேரா குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:-

சிறுபான்மை மக்கள் ஒடுக்கப்படும்போது தென்னிலங்கையிலிருந்து அடித்துவிரட்டப்படும் பொழுது அம்மக்கள் பிரிந்துபோவது தான் வழியென்று தீர்மானித்தால் அவர்களுக்கு அந்த உரிமை உண்டு. இதனை மறுப்பவர்கள் முதலாத்துவ வாதிகளாக இருக்கலாமே அன்றி உண்மையான இடதுசாரிகளாக இருக்க முடியாது.

கருத்தரங்கிற்கு தலைமை தாங்கிய பேரவை அமைப்புச் செயலாளர் செ. வி. நாதன் தலைமையுரையில் கூறியதாவது தேசியப் பிரச்சனைகள் பல உண்டு. அவற்றில் பெரிய பிரச்னையாக தமிழ்ப் பேசும் மக்களின் பிரச்சனைகள் உருவெடுத்துள்ளன இதனுல் ஏற்படுகின்ற நெருக்கடிகளை சமாளிக்க ஆளும் வர்க்கம் அம் மக்களை ஒடுக்குவதற்கான பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் இவ்வேளையில் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ்ப் பேசும் மக்களிலிருந்து மலையக மக்களை தனிமை படுத்தவும், பெரும் தொழிலாளர் வர்க்கச் சக்தியான மலையகத் தொழிலாளர்களை நாட்டின் ஏனைய தொழிலாளர்களிலிருந்து பிளவுபடுத்தவும் மலையக மக்கள் தனித்தேசிய இனமாகும் என்ற கோஷம் கிளப்பப்பட்டு வருகின்றது

பிற்போக்கு வாதிகளினுலும் சுயலாப நோக்குடையோராலும் செய்யப்படும் இப்பிரச்சாரத்தை முறியடிக்கவும் பிரித்தாளும் முதலாளித்துவ சூழ்ச்சிக்கெதிராக போராடவும் வேண்டியது ஒவ்வொரு இடதுசாரிகளினதும் கடமையாகும்.

இக் கருத்தரங்கில் திருவாளர்கள் கே. எம். மகாலிங்கம், எஸ். சுந்தரலிங்கம், அ. பாலகிருஷ்ணன், செல்வி. பொன். மலேஸ்மணி ஆகியோரும் உரையாற்றினர். (அ)

...

## பிலிப்பைன்ஸ் உதவியுடன் பாலர் பாடசாலைகள் புனரமைப்பு

(பலாலி)

இலங்கை எஸ். எஸ். ஆர். நிறுவனம் இலங்கையிலுள்ள பாலர் பாடசாலைகளை ஒரு முகப்படுத்தி, உதவிகள் புரிவதற்கு நடவடிக்கைஎடுத்துவருகிறது. அரசாங்கப்பாடசாலைகளில் ஆரம்ப வகுப்பில்சேரும் மாணவர்களின் வயதை ஆறிலிருந்து ஐந்தாகக்குறைத்ததனுல், பாலர் பாடசாலை பெரிதும் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது இதைமனதில் கொண்டே இந்நிறுவனம் பாலர் பாடசாலைகளுக்குஉதவ முன்வந்துள்ளது

பிலிப்பைன்ஸ் நாட்டின்ஆதரவுடனே இயங்கிவரும் இந்நிறுவனத்தின தலைமையகம் கொழும்பில் அமைந்துள்ளது. யாழ். கிளை அலுவலகம் கொழும்புத்துறையில் அமைக்கப்பட்டுள்ளதுடன், அதன் நிர்வாகியாக திரு பீ. கே. பொன்னம்பலம் கடமையாற்றி வருகிறுர்

இந்நிறுவனம் பொறுப்பேற்கவிருக்கும் பாலர் பாடசாலைகளின் ஆசிரியைகளுக்கு நிரந்தர ஊதியம் வழங்கப்படுவதுடன், மாணவர்களுக்கு பிஸ்கட், பால் என்பனவும் விநியோகிக்கப்படும் பாடசாலைக்குத் தேவையான தளபாடங்கள், உபகரணங்கள் பாலர்களுக்கு உபயோகமான விளையாட்டு உபகரணங்களையும் கொடுத்துதவும். மேலும் இந்நிறுவனம் கிராமிய புனருத்தாரண வேலைகளிலும் முக்கிய பங்கை வகிக்கின்றது.

இதன் ஓர் அம்சமாக மருத்துவம், விவசாயத்துறைகளில் இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் இலவச பயிற்சித் திட்டத்தை பிலிப்பைன்ஸ் நாட்டில் அளித்துவருகிறது இப்பயிற்சியை வெற்றிகரமாக முடித்துக்கொள்ளும் பயிற்சியாளருக்கு இலங்கையில் வேலைவாய்ப்புக்களையும் கொடுக்கிறது.

யாழ்ப்பாணம் கண்டி வீதியிலுள்ள வி என் ஏ பி ரி.க டடத்தில் இயங்கும் பாலர் பாடசாலையில் பிள்ளைகள் சேர்வதற்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன.

## இந்தப் பொருட்கள் யாருடையவை?

[புலோலி]

தொண்டமானுறு செல்வச்சந்நிதி கோவில் தேர்த்திருவிழாவின்போது யாத்திரிகர்களினுல் தவறவிடப்பட்ட பல பொருட்கள் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதிபதி திரு. கே. ஞானச்சந்திரன் முன்னிலையில ஒப்படைக்கப்பட்டுள்ளன. இப்பொருட்களை இழந்த யாத்திரிகர்கள் தகுந்த அடையாளங்களையும், ஆதாரங்களையும் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

பெண்கள் அணியும் கைக்கடிகாரமொன்று, பணத்துடன்கூடிய 3 பேர்ஸ், கைக்குடையில் முடியப்பட்ட பணம், இரண்டு திறப்புக் கோர்வைகள ஆகிய பொருட்கள் கண்டெடுக்கப்பட்டிருந்தன இப்பொருட்களின் மீது உரிமை கொண்டாட யாரும் முன்வராதனதயடுத்து, வல்வெட்டித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு கே ஏ ஆரியபாலா இப்பொருட்களை பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார்.

இப்பொருட்களை இழந்த யாத்திரிகர்கள் உரிய அடையாளங்களையும், ஆதாரங்களையும் காட்டி பொருட்களை பெற்றுக்கொள்ளலாமென பருத்தித்துறை நீதிமன்றம் தெரிவித்துள்ளது [ஈ]

# "எண்ணெய் விலை அதிகரிப்பு தவிர்க்க முடியாதது"

## ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அறிவிப்பு

அபுதாபி, நவ 27 எண்ணெய் விலை அதிகரிப்பு தவிர்க்கமுடியாதது என்று ஐக்கிய அரபு எமிரேட்ஸ் எண்ணெய் மந்திரி தெரிவித்துள்ளார்.

எண்ணெய் விலையை அதிகரிப்பதென எண்ணெய் உற்பத்தி ஏற்றுமதி நாடுகள் ஸ்தாபனம் ஏற்கனவே தீர்மானித்துள்ளபோதிலும் அடுத்த மாதம் 16ம் திகதியே எண்ணெயின் விலையை என்ன விகிதத்தில் அதிகரிப்பதென முடிவு செய்யப்படஉள்ளது.

அபுதாபியில் டிசம்பர் 16ம் திகதி கூடும் 'ஒப்பெக்' நிறுவன நாடுகள் கலந்தாலோசித்து அதிகரிப்பு விகிதம் குறித்து தீர்மானிக்கும். (ே

## ஜனதாகட்சி பிரிவுண்டால் நாட்டில் ஊறு விளையும்

### சரண்சிங் கருத்து

புதுடில்லி. நவ 27 "ஜனதாகட்சி பிளவுற்று, சிதறுண்டால் அது நாட்டுக்குப் பெரும் ஊறு விளைவிக்கும்"

இவ்வாறு இந்திய முன்னாள் உள்துறை மந்திரி திரு. சரண் சிங் தெரிவித்துள்ளார்.

உத்தரப் பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே திரு. சரண்சிங் மேற்கண்டவாறு கூறினார்.

"ஜனதாக் கட்சிக்குள் ஏற்பட்ட பிரச்னைகள் எல்லாம் தற்காலிகமானவை. அவை எல்லாம் விரைவில் தானாகவே தீர்ந்துவிடும்" என்றும் திரு. சரண்சிங் தெரிவித்தார். (ந)

## நாடகம்

[யாழ்ப்பாணம்]

யாழ் சட்டக்கல்வி நிலையத் தயாரிப்பான "கலைந்த ராகங்கள்" சமூக நாடகம் முற்றுப்பெறும் நிலையை அடைந்துள்ளது.

செங்கை ஆழியானின் தலைமையில் குருபூஜை இடப்பட்டு திரு. குமாரவேலு ஆசிரியரின் மேற்பார்வையில் வளர்ந்து வந்த இந்நாடகத்தில் திரு. சபாஅருள்ராஜ் உட்பட நாடக உலகின் பல பிரசித்தமான நடிகர்கள் நடிக்கின்றனர். [கி]

## "சிறுபான்மைத் தமிழர் முன்னேற்றத்திற்கு தொண்டாற்றினார்!"

(யாழ்ப்பாணம்)

"அமரர் ஆ. ம. செல்லத்துரை சாதிக் கொடுமைகள் உச்ச நிலையில் இருந்த காலத்தில், கஷ்டத்தின் மத்தியில் கல்வி கற்று ஓர் ஆசிரியராகத் தோன்றினார். தாம் கல்வி கற்றால்மட்டும்போதாது; தமது சமூகமும் கல்வியில் முன்னேற வேண்டுமென எண்ணிப் பல கருமங்களை ஆற்றினார். அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையை ஆரம்பித்துவைத்தவர்களுள் இவரும் பெரும் பங்கினை வகிக்கின்றார்."

சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கத்தில் நடந்த கூட்டத்தில் சங்கத் தலைவர் திரு. பி. ஜே. அன்ரனி பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. அன்ரனி மேலும் கூறியதாவது:-

"வில்லூன்றி மயானத்தில் சுடுபட்டு இறந்த தியாகி முதலி சின்னத்தம்பியின் வழக்கை நடத்துவதற்கு நிதிக் கஷ்டத்தினால் அல்லல்பட்டபோது அமரர் செல்லத்துரை எமக்கு நிதி சேர்த்துத் தந்து அவ்வழக்கை நடத்துவதற்கு உதவி புரிந்தார்.

"ஆலயப்பிரவேசம், தேநீர்க்கடைப் பிரவேசம்போன்றவற்றில் தீவிரமாக உழைத்தார். அவற்றில் அவர் வெற்றியும் கண்டார். அவரைச் சிறுபான்மைத் தமிழ் மக்கள் என்றும் நினைவில் வைத்திருக்கவேண்டும். இக்கால இளைஞருக்கும் வருங்காலச் சந்ததியினருக்கும் அவர் சிறந்தவொரு வழிகாட்டியாகும்."

அமரர் செல்லத்துரையின் ஆத்ம சாந்திக்காக, கூட்டத்தில் இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது (க. அ)

# தமிழ்நாட்டில் சூறுவளியினால் ரூ. 2 கோடி சேதம்

சென்னை, நவ 27 தென்தமிழ்நாட்டின் கரையோரப்பகுதிகளில் கடந்த வாரம் ஏற்பட்ட சூறுவளியினால் 2 கோடி ரூபா சேதம் ஏற்பட்டுள்ளது என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம், பாம்பன், வேதாரணியம், மண்டபம் ஆகிய பகுதிகள் சூறுவளியினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

பாம்பன்பாலத்தை கட்டுவதற்காக பாலத்தின் அருகே சேகரித்து வைக்கப்பட்டிருந்த 20 லட்சம் ரூபா பெறுமதியான இயந்திரங்களும் மற்றும் சாதனங்களும் சூறுவளியினால் அடித்துச்செல்லப்பட்டு கடலில் மூழ்கின.

### மதிப்பிட மத்திய குழு

இதேவேளையில், தமிழ் நாட்டில் ஏற்பட்ட சேதங்களை மதிப்பிடுவதற்காக மத்திய அரசுவிசேட குழு ஒன்றை தமிழ்நாட்டுக்கு அனுப்பி வைத்துள்ளது. (இ)

## பூமதியனின் உடல்நிலையில் அபிவிருத்தி

அல்ஜீயர்ஸ், நவ. 27 கடந்த 9 நட்களாக மயக்கமுற்று ஆபத்தான நிலையிலிருக்கும் அல்ஜீரிய ஜனாதிபதி திரு. பூமதியனை சுவீடன், ரஷ்யா டூனிஷியா உட்பட 10 நாடுகளைச் சேர்ந்த டாக்டர்கள் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

தற்போது உடல்நிலை அபிவிருத்தி அடைந்துவருவதாகவும், சத்திர சிகிச்சைக்கு அவசியமில்லை என்றும் டாக்டர்கள் தெரிவித்தனர். (இ)

## மூப்பனாரின் ராஜினாமாவுக்கு அங்கீகாரம்

புதுடில்லி, நவ. 27 தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. கறுப்பையா மூப்பனாரின் ராஜினாமாவைக்கட்சி தலைமைப்பீடம் ஏற்றுக்கொண்டுள்ளது. (இ)

## குமரி அனந்தன் அனுதாபம்

சென்னை, நவ. 27 இலங்கையிலும் இந்தியாவிலும் சூறுவளியினால் உயிர் துறந்தோருக்கும் பாதிப்படைந்த மக்களுக்கும் காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் தலைவர் திரு குமரிஅனந்தன் அனுதாபம் தெரிவித்துள்ளார். (இ)

## இன்றைய இராசி பலன்

கார்த். மாதம் 12-ந் திகதி

செவ்வாய்க்கிழமை (28-11-78)

மேடம்:- போதுமென்ற மனதுடன் செயலாற்றுங்கள், களஸ்திரவழியில் பெருமைகள் வந்துசேரும், தொழில் துறையில் வெற்றியுமுண்டு.

இடபம்:- எதிர்பார்த்த காரியத்தில் தடைகள் ஏற்படும், அவசர முடிவு ஆபத்தைத் தேடித்தரும், குடும்பத்திலும் பதட்டநிலை தென்படும்.

மிதுனம்:- வரவிலும் திருப்தி ஏற்படும், பிதாவழி ஆதரவும் கிடைக்கும், எதிர்பார்த்துக் கொண்டிருந்தவிடயம் சாதகமான முடிவைத் தரும்.

கடகம்:- அறிவுத்தாகம் மேலோங்கி நிற்கும், விருந்தினர்கள் வருகை மகிழ்ச்சியைத் தரும், தொழில் விருத்திக்கும் இடமுண்டு.

சிங்கம்:- எதிர்பாராத பொருள் வரவிற்கும் இடமுண்டு. செல்வாக்குப் படைத்தவர்களின் ஆதரவு கிடைக்கும், வாழ்க்கையிலும் வசந்தம் நிலவும்.

கன்னி:- பொருள் நஷ்டத்திற்கு இடமுண்டு, தொழிலிலும் கவனம் செலுத்தவும், விரகதி மனப்பான்மை தென்படும், பொறுமை நன்று.

துலாம்:- சிலரின் குறுக்கு வழித் தலையீடு வேதனையைத் தரலாம், குடும்பத்திலும் சுகக் குறைவுகள் தென்படும், நிதானம் வேண்டும்.

விருச்சிகம்:- இதயப்படுதாவில் இன்பத்தின் கூத்து, வாழ்க்கை சில காரியங்கள் நிறைந்ததாக இருக்கும், நுட்பமான வேலைகளில் ஈடுபடுவோர் போற்றப்படுவார்கள்.

தனுசு:- உறவு முறைகளில் பிளவு தென்படும், மனதில் உற்சாகம் குன்றும், அபாயகரமான காரியங்களில் ஈடுபடாதிருக்கவும்.

மகரம்:- வாகனச் சொந்தக்காரர்களுக்கு சிறப்பான தினம், கல்வித்துறையில் நல்ல முன்னேற்றமுண்டு, தாய்வழி தனவரவிற்கும் இடமுண்டு.

கும்பம்:- வசதிகள் பெருகும், வாழ்க்கையில் நல்லதிருப்பம் ஏற்படும். புத்திரர் சுகத் திருகிடமுண்டு.

மீனம்:- அதிகாரக் குறைவுக்கிடமுண்டு, முன்னேற்றம் தடைப்படும், எதிரிகள் தாக்குவர், அவசர நடவடிக்கையைத் தவிர்க்கவும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

முல்லைத்தீவு—யாழ்ப்பாணம்

# புதிய கடுகதி பஸ்சேவை

## பூரணமாகப் பயன்பட வேண்டும்

புதுக்குடியிருப்பு ஊடாக 1-11-78 தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ள முல்லைத்தீவு - யாழ்ப்பாணம் கடுகதி பஸ் சேவை முழுமையான பலனையளிக்கவேண்டுமாயின் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த தேவிபுரம், சுதந்திரபுரம், உடையார்கட்டு போன்ற யாழ்ப்பாண குடாநாட்டிலிருந்து குடியேற்றப்பட்ட பல்லாயிரக்கணக்கான மக்கள் வாழும் பின் தங்கிய பகுதிகளிலும் நிறுத்தி பஸ் பிரயாணிகளை ஏற்றிச் செல்லவேண்டும்.

சென்ற 4-11-78ந் திகதி தொடக்கம் புதுக்குடியிருப்பு ஊடாகமுல்லைத்தீவு-யாழ்ப்பாணம் கடுகதி சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டது. காலை 5-00 மணிக்கு முல்லைத்தீவில் புறப்பட்டு 8-15 மணிக்கு யாழ்ப்பாணம் அடைவதாக புதுக்குடியிருப்பு, விஸ்வமடு, பரந்தன் ஆகிய இடங்களில் பிரயாணிகளை ஏற்றி கொடிகாமம் யாழ்ப்பாணம் கொண்டு செல்லுகின்றது. இது ஒரு நல்ல சேவையாக இருந்தாலும் இப்பஸ் சேவை பரந்தன் வரையில் செல்லும்போது குறிப்பிடத்தக்க பிரயாணிகள் பிரயாணம் செய்வதாக இல்லை. பரந்தனில் இருந்தே பிரயாணிகள் நிறைய செல்வதை அவதானிக்க கூடியதாக உள்ளது. கண்டி - யாழ்ப்பாணம் நீண்ட பாதையில் இருப்பது பரந்தன் எத்தனையோ பிற இடங்களிலிருந்து வரும் பஸ்களின் சேவைகள் நிறைய உண்டு.

ஆதே சமயம் உள் ரேட்டிலுள்ள முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த தேவிபுரம், சுதந்திரபுரம், உடையார்கட்டு போன்ற யாழ்ப்பாணக் குடாநட்டிலிருந்து குடியேற்றப்பட்ட பல ஆயிரக்கணக்கான மக்கள் வாழும் பின் தங்கிய பகுதிகளில் இந்தக் கடுகதி பஸ்சேவை நிறுத்தப்படுவதில்லை. இம்மூன்று குடியேறறத்திட்டத்திலும் வாழும் மக்களுக்கு யாழ்ப்பாணத்தோடு நெருங்கிய தொடர்புகள் உண்டு சுக துக்கங்களுக்கும் கச்சேரி, கோடு, ஆஸ்பத்திரி போன்றவைகளுக்கும் போகவேண்டிய சந்தர்ப்பங்கள் நிறைய உண்டு. அவ்வகையான யாழ்ப்பாணத்துடன் தொடர்பான மக்கள் வாழும் குடியேற்றத்திட்டத்தினூடாக செல்லும ஒரு கடுகதி பஸ் இப்பகுதி மக்களுக்கு பிரயோசனப்படாது நடைபெறுவது விசித்திரமானதும், விசனத்துக்குரியதுமாகும்.

அத்தோடு இப்பகுதி மக்கள் கொழும்பு அல்லது வவுனியா போன்ற இடங்களுக்கு செல்வதற்கான காலை உத்தரதேவி ரயில் வண்டியை பிடிப்பதற்கும் பரந்தனுக்கு நேரத்திற்கு செல்ல வேறு எந்த பஸ் வசதியும் இல்லை. இந்தக்கடுகதிச் சேவை பரந்தனில் புகைவண்டியை பிடிப்பதற்கான ஒரு தொடுக்கும் சேவையாகவும் பயன் படுத்தப்படலாம் அத்துடன் இக்கடுகதி சேவை யாழ்ப்பாண கச்சேரியடி, கோட்டடி, ஆஸ்பத்திரியடி போன்ற தரிப்புகளில் நின்று பிரயாணிகளை இறக்கிசெல்ல வேண்டியதும் அவசியமாகின்றது தற்சமயம் கச்சேரிக்கு அலுவலாகச்செல்லும் ஒருவர் பஸ்நிலையத்திலிருந்து மீண்டும் பஸ்ஸில் அல்லது டாக்ஸியில் ஏறிப் போகவேண்டிய நிலையிருப்பதால் செலவு மட்டுமன்றி நேரமும் விரயமாகின்றது.

இந்த தரிப்புக்களினால் ஏற்படும் நேர விரயத்தை ஆரம்பமாகும் நேரத்தில் அல்லது வந்தடையும் நேரத்தில் 5 நிமிடங்களை முன்கூட்டியோ அல்லது பின்போட்டோ சரிப்படுத்துவதால் எவ்வித நஷ்டமும் ஏற்படப்போவதில்லை.

யாழ்ப்பாணத்துக்குப் போகும் ஒரு கடுகதி சேவை யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறி நாட்டின்பொருளாதார அபிவிருத்திக்காகக் காட்டுப் பகுதிகளில் வந்து இன்னல்களுக்கிடையே விவசாயம் செய்யும் மக்களுக்கு உதவ வேண்டுமென்பதைக் கோருவது எவ்விதத்திலும் எவராலும் தட்டிக்கழிக்ககூடிய தொன்றல்லஎன்பது திண்ணம் சம்பந்தப்பட்ட இ. போ. ச. அதிகாரிகள் அரசாங்க அதிபர் இவற்றை நிவர்த்திசெய்ய உடனடியாக முன்வருவார்களா?

தேவிபுரச்சந்தி, சுதந்திரபுரச் சந்தி, உடையாகட்டுச் சந்தி ஆகிய மூன்று குடியேற்ற திட்டங்களின் சந்திகளிலும் இப்புதியகடுகதிச்சேவை நின்று போவதற்கு உதவுவார்களா? அதே சமயம் இந்த புதிய சேவையின வருமானத்தை கூட்டுவதற்கும் உதவியவர்களாக இருப்பார்களா?

கனகனமன்
புதுக்குடியிருப்பு.

### ஆசிரியருக்கு கடிதம்

[யாழ்ப்பாணம்]

கலையகம் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் திரு இ சிவஞானம் தலைமையில் நிலையத்தில் நடைபெற்ற போது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர் தலைவர் ஆ ஜெகசோதி செயலாளர் த ... பொருளாளர் த வன் ஜீஸ்வரன் ஆகியோர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது (இ)

நாகம்ஸ்
(அரிருகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
எம். ஜி. ஆர். - லதா
நாளை நமதே

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
ஒரு தாய்மக்கள்

Rio
Daily 4 Shows
Michael Caine in
KIDNAPPED
(Mistery—Thrill)

## சென்பற்றிக்ஸ் வெற்றி

(யாழ். விளையாட்டுநிருபர்)

யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியில் சென்பற்றிக்ஸ் கல்லூரி வெற்றியீட்டியது.

3-ம் பிரிவுப் போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி 3-1 கோல்களாலும் 2-ம பிரிவில் 2-0 கோல்களாலும் 1-ம் பிரிவில் 2-0 கோல்களாலும் வெற்றியீட்டியது.

இப்போட்டிகள் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்திலேயே நடைபெற்றன.

மனோகரா
[யாழ்நகர்]
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-ஜெயலலிதா-ஸ்ரீகாந்த்
சுகுமாரி நடித்த
கணவன் மனைவி

ராஜா
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - ஜெமினி - சாவித்திரி
நடித்த
பந்த பாசம் (புதிய பிரதி)

தினசரி 4 காட்சிகள்
வீரபாண்டிய கட்டபொம்மனின் தொடர்காவியம்
ராணி
எஸ். எஸ். ஆர்- வீரப்பா
குமாரி கமலா- டி. கே. பகவதி ராஜம்
[யாழ். நகர்]
நடித்த
சிவகெங்கைச் சீமை புதி. பி. இ

வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ஜக்கம்மா
அடுத்தவெளியீடு: லலிதா

லிடோ
[யாழ். நகர்]
போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
எங்கள் தங்க ராஜா!

திகில் - திகைப்பு - ஆச்சரியம்.
REGAL
(Jaffna)
NOW SHOWING
Daily at, 4-30, 7-00 & 9-30 p.m.
CHRISTOPHER LEE in
"Dr. Terror and the House of Horror's"
(Color — Adults Only)
விநாடிக்கு விநாடி உங்கள் இரத்தத்தை உறையவைக்கும் காட்சிகள் நிறைந்த பயங்கரப் படம்.

சாந்தி
(யாழ்நகர்)
போன்: 7642
10-30, 2-30, 4-45, 7-00 & 9-30
A GRAND RELEASE!
LEE VAN CLEEF... LO LIEH...
BLOOD MONEY (Scope - Color)
'பிளட்மனி' பயங்கர கராட்டி படம்

வின்ஸர்
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள் போன்: 466
5 வது வெற்றி வாரம்
ஓ சிவராம் ஓ சந்திரகலா ஓ தனரத்தினம்
நடித்த
அநுராகம்

சபாஷ்! சபாஷ்!! சபாஷ்!!!
ஹவுஷ் புல்! ஹவுஸ்புல்!! ஹவுஸ்புல்!!!
ஸ்ரீதர்
தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
சிவாஜி - சரோஜாதேவி - மாலினி - சந்திரபாபு
நடித்த
(இரு வேடங்களில்)
சபாஷ் மீனு
(புத்தம் புதிய பிரதி)

'தமிழ் மாணவர் மீதான

# அபாண்ட குற்றச்சாட்டுக்கு பொருமையே காரணம்'

—வட்டு. எம். பி.

(சுழிபுரம்)

"கல்வித்துறையில் முன்னேறும் தமிழ் மாணவர்கள் மீது உண்டான பொருமையே அவர்களது விடைத்தாள்கள் திருத்தப்பட்ட விதம் குறித்து சுமத்தப்பட்டுள்ள அபாண்ட குற்றச்சாட்டுக்குக் காரணமாகும்"

இவ்வாறு வட்டுக்கோட்டை எம். பி. திரு. ரி. திருநாவுக்கரசு சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி பெற்றோர் தினவிழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. கே. அருணசலம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது. 2 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட புதிய கட்டிடத்தையும் எம். பி. திறந்துவைத்தார்.

திரு திருநாவுக்கரசு எம். பி மேலும் பேசுகையில் கூறியதாவது:

"தமிழ்பேசும் மாணவர்களின் கல்வியின் தரத்தை குறைக்க அரசு முயன்றுள்ளதை அண்மைக்கால சம்பவம் ஒன்று நமக்கு நன்கு சுட்டிக்காட்டுகின்றது. பொறுப்புவாய்ந்த அமைச்சர் ஒருவர் பொறுப்பற்றவகையில் தமிழ்ஆசிரியர்கள் மேல் வீண்பழியைச் சுமத்தியுள்ளார்.

"கல்வியால் முன்னேறும் தமிழ்இனத்தின் மேல் உண்டான பொருமையே இதற்குக் காரணமாகும். ஆங்கில மொழியில் விடை எழுதிய சிங்கள தமிழ் மாணவர்களில் தமிழ் மாணவர்களே அதிக மானவர்கள் சித்தியடைந்துள்ளனர். இவ் விடயத்தை சுட்டிக்காட்டாது தமிழ்ஆசிரியர் சரிபார்த்த விடைத்தாள்களில் மட்டும்தான் தவறு உள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

"சிங்கள மாணவர்கள் எழுதிய விடைத்தாழ்களில் இப்படியான தவறுகள் ஒன்றும் இல்லையா? விடைத்தாள்களை பார்கும் பரிசீலனை நடைபெற்றால் அல்லவா உண்மை தெரியும், தமிழ் மாணவர்கள் கல்வியில் கூடிய கவனம் செலுத்தியவர்களாக விளங்கியதாலேயே இவ்வாண்டு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் பணத்தை இங்கு அனுப்பி அரசுக்கு நாற்பது வீதமான அன்னிய செலாவணியைத் தேடித்தர முடிந்துள்ளது. எமது மாணவர்களின் திறமையை முறியடிக்கும் செயலை நாம் கண்டித்தே தீருவோம். இக் கல்லூரியில் கல்விகற்று எங்கள் தலைவராக விளங்கும் திரு. அ. அமிர்தலிங்கம் கற்ற கல்லூரிக்கு வேண்டிய சகல உதவிகளையும் செய்வதுடன் எனது தொகுதியின் முதல்தர கல்லூரியாக இக் கல்லூரியைச் திகழச்செய்வேன் என்றார்.

கல்லூரி அதிபர் திரு. க. அருணசலம் தமது தலைமையுரையில் பேசுகையில், "பெற்றோர் ஆசிரியர் சங்கம் பாடசாலை அபிவிருத்திக்கும், மாணவர் உயர்வுக்கும் பெரிதும் பயன்உள்ளவகையில் இயங்க வேண்டுமானுல் அது ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையில்பரஸ்பரம் நல்லெண்ணத்தை வளர்க்கக்கூடியதாக இருக்கவேண்டும்.

மாணவரின் உயர்வுக்காக இருதரப்பினரும் உழைப்பதற்கு மாணவர்களின் வீட்டுச் சூழ்நிலைபற்றி ஆசிரியரும் அவர்களின் பாடசாலை வாழ்க்கை பற்றி பெற்றோரும் நன்ருக அறியவேண்டி இருக்கின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக ஆசிரியரின் பொறுப்பு என்ன? பெற்றோருடைய பொறுப்பு என்ன? என்று வரையறுக்கப்பட்டு ஆசிரியரின் மதிப்பு நிலைநாட்டப்பட வேண்டும்.

### வித்தியாதிபதி பேச்சு

வடமாநிலக் கல்விஅதிபதி திரு. மாணிக்கவாசகர் தாபக நினைவுஉரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது: "இக் கல்லூரியின் தாபகர் கனகரத்தினம் முதலியார் அவர்களையும் அவருக்குப் பின் இக் கல்லூரியை நீண்டகாலமாக கட்டிக்காத்த மனேஜர் செல்லப்பாவையும் இவர்களது சேவையையும் நாம் என்றும் மறக்கமுடியாது. கல்வியின் நோக்கம் பாரம்பரியத்தை காத்தலேயாகும். அறிவை வளர்க்கவேண்டிய கல்வியை நாம் போதிப்பதில் முன்னிற்கின்றேம். 'இன்று அகில இலங்கைக்கு முன்மாதிரியாக நாம் தொண்டமாற்றிய விஞ்ஞான 'அறிவு ஆராட்சியை வளர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம். இதே போல வேறுபல ஆராய்ச்சிகளையும் நடாத்த நடவடிக்கை எடுத்துள்ளோம். ஊழல் மோசடிகள் இல்லாதவாறு நாம் சமதர்மவாதிகளாக விளங்கவேண்டும். ஒருவனுக்கு அறிவை வளர்ப்பதே எங்கள் நோக்கமாக இருக்க வேண்டும். ஒருவன் கலலூரியில் பெற்ற கண்ணியம், கட்டுப்பாடு கடமைதான் அவனை உயர்ந்தவனுக வாழச்செய்யும் என்பதை நன்கு தெரிந்துகொள்ளவேண்டும். கல்வியை போதிப்பதற்கு ஆசிரியர்களுடன், பெற்றோரும் யாவரும சேர்ந்து உழைக்கவேண்டும், ஒழுக்கம்குன்றியவர்களை நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் ஆக்கவேண்டும். சமயபாடம் எப்போதும் வேண்டும். வாழ்வும் சமயமும் ஒன்றுபட்டால் மட்டுமே கல்வியில் பயன்கண்டுகொள்ளலாம் என்ருர்.

விழாவில் திருமதி மங்கையர்க்கரசி. அமிர்தலிங்கம் பேசுகையில் "ஒரு பாடசாலையின் பெருமை கட்டிடங்களில் அல்ல அங்கு கல்வி கற்கும் மாணவர்களின் திறமையிலும் கல்வி போதிக்கும் ஆசிரியர்களின் மேன்மையிலுமே தங்கியுள்ளது. எனது கணவருடன் நான் உலக நாடுகளுக்கு சென்றபோது வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பெருமையை நன்கு அறிந்துகொண்டேன். கட்டிடம் உயர்வது அல்ல முக்கியமானவர்களின் உள்ளம் உயர்வதுதான் முக்கியம். எமது அறிஞர்கள் பலர் அன்று கல்லூரிகளில் கல்வி கற்றவர்கள் அல்ல. தெருவிளக்குகளிலும் திண்ணைகளில தான கல்விகற்றவர்கள். ஆதலால் தான் கட்டிடம் முக்கியம் அல்ல என்று குறிப்பிட்டேன், எமது பிள்ளைகளுக்கு தமிழ் மொழியையும் எமது வரலாற்றையும் கற்பிக்கவேண்டும்.

கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. செல்வன் எஸ். சுரேந்திரன், திரு டீ. செல்வநாயகம் ஆகியோர் நன்றியுரை கூறினுர்கள்.

## பரியோவான் வடமாகாண சாம்பியன்

[அரியாலை]

வடமாகாணக் கல்லூரிகளுக்கிடையிலான 13 வயதுக்குட்பட்ட மாணவர் கூடைப்பந்தாட்டப் பிரிவில் யாழ் பரியோவான் கல்லூரிக் கோஷ்டி வடமாகாணச் சாம்பியனுகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இறுதிப்போட்டிகளில் யாழ் மத்திய கல்லூரியை 16—8 புள்ளிகளாலும், யாழ் ஒஸ்மானியாக் கல்லூரியை 20-4 புள்ளிகளாலும் பரியோவான் தோற்கடித்தது.

நீர்கொழும்பில் நடைபெற்ற மாகாணங்களுக்கிடையிலான கூடைப்பந்தாட்டப் போட்டியில் குருநாகல் சென். ஆன்ஸ் கல்லூரி 23-6 புள்ளிகளாலும் கொழும்பு சென் பீற்றர்ஸ் கல்லூரி 58-8 புள்ளிகளாலும் யாழ் பரியோவான் கல்லூரிக்கோஷ்டியை வெற்றியீட்டின. (இ)

## பரியோவான் வெற்றி

(அரியாலை)

யாழ். பரி. யோவான் கல்லூரி உதைபந்தாட்டக் கோஷ்டிகளுக்கும் யாழ்ப்பாணம் கல்லூரி உதைபந்தாட்டக் கோஷ்டிகளுக்குமிடையே நடைபெற்ற மூன்று பிரிவுப் போட்டிகளிலும் பரி. யோவான் கல்லூரிவெற்றியீட்டிது.

யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் முதலாம் பிரிவுப் போட்டியில் 2 - 0 கோல்களாலும் இரண்டாம் பிரிவுப் போட்டியில் 5 - 0 கோல்களாலும் மூன்ரும் பிரிவுப் போட்டியில் 3 - 0 கோல்களாலும் யாழ். பரி. யோவான் கல்லூரி வெற்றியீட்டியது. (இ)

## பயிர்ச்செய்கைக்குழு வெற்றி

[சங்கானை]

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ஆசிரியர் குழுவிற்கும் தொல்புரம் பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்களுக்குமிடையில் நிகழ்ந்த சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் தொல்புரம் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் கோஷ்டி 2-0 கோல்களால் வெற்றியீட்டியது.

திரு எஸ். கிருபைராஜா நடுவராகக் கடமையாற்றிய இப்போட்டி விக்ரோறியக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. [உ]

## சென்.ரேக் வெற்றி

[யாழ்ப்பாணம்]

யாழ் சென்ரேக் சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினருக்கும் நாவாந்துறை சென் நீக்கிலஸ் சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினருக்கும் குருநகர் கடலனை மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைப்பந்தாட்ட போட்டியில் செல் ரேக் சனசமூக நிலையத்தினர் 5 - 3 கோல்களால் வெற்றியீட்டினர்.

சென்ரேக் விளையாட்டுக் கழகத்துக்கும் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்திற்கும் யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரிமைதானத்தில் நடைபெற்ற இன்னுமொரு உதைபந்தாட்டப் போட்டியில் இரு கோஷ்டிகளும் 4 கோல்களைப்போட்டன [இ]

## புயல் நிவாரணப் பணி

# நிதி, ஆடை சேகரிப்பில் விரிவுரையாளர். மாணவர்

(யாழ்ப்பாணம்)

சூறுவளியாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் பொருட்டு யாழ் வளாகத் தமிழ்மன்றத்தினர் ஆடை சேகரிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை புயல் நிவாரணமாக விரிவுரையாளர்கள நிதிசேகரிப்பு வேலைகளை மேற்கொண்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் வளாக அடையாள அட்டைகளுடனேயே இக்கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

ஒருவாரம்வரை யாழ். மாவட்டப் பகுதிகளில் இக்கடமைகள் மேற்கொள்ளப்படும்.

வளாகமாணவர்கள் வளாகத்தைச் சூழவுள்ள திருநெல்வேலி, கந்தர்மடம், கொக்குவில், கலட்டி, கண்டிக்குளி, கொழும்புத்துறை, பாஷையூர் போன்ற யாழ் நகரப் பகுதிகளில் மேற்கொண்ட புயல்நிவாரண வேலைகள் பெருமளவு வெற்றியளித்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்கள் பெருமனதுடன் பெருமளவு உடைகளை வளாக மாணவரிடம்கையளித்துள்ளனர்.

காங்கேசன்துறை, மயிலிட்டி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, நெல்லியடி ஆகிய பகுதிகளில் மாணவர்கள் நேற்று ஆடை சேகரிப்பில் ஈடுபட்டனர்.

இன்று உரும்பராய், கோப்பாய், மானிப்பாய், சண்டிலிப்பாய், சங்கானை, நீர்வேலி, ஆனைக்கோட்டை ஆகிய பகுதிகளில் ஆடைசேகரிப்பில் இவர்கள் ஈடுபடுவர்

ஆடைசேகரிக்கும் மாணவர்கள் எவ்வேளையிலும் பணம் சேகரிக்கமாட்டார்களென்றும் நிதியுதவி புரியவிரும்புவோர் வளாக விரிவுரையாளர் சங்கத்துடன் "விரிவுரையாளர் சங்கம் யாழ்ப்பாண வளாகம்திருநெல்வேலி" என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (உ)

## தனியார்துறை டாக்டர்களின் சேவை

(கொழும்பு)

சூறுவளி வெள்ள நிவாரணப்பணிகளை மேற்கொண்டு வரும் அரசாங்க டாக்டர்களுக்கு தனியார்துறை டாக்டர்களும் உதவி புரிந்து வருகிறார்கள்.

சுதந்திர வைத்தியஅதிகாரிகள் சங்கத்தைச்சேர்ந்த டாக்டர்கள் அனைவரும் சங்கக் காரியதரிசி டாக்டர் ஏ ஏ ஹஸாரியின் வேண்டுகோளின் பேரிலேயே தனியார்துறை டாக்டர்கள் இச்சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களுக்கான இருப்பிட போக்கு வரத்து வசதிகளை சுகாதார அமைச்சு அளித்துள்ளது.

## பேரவை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இதேசமயம் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உணவு உடை போன்றவற்றை சேகரிக்கும் பணியில ஈடுபட்டுள்ள தொண்டர்கள் தலைமை அலுவலகத்தில் இருபத்துநான்கு மணி நேர சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களின் இப்பணிக்கு கோப்பாய் அரசினர் பெண்கள் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியினரும், மற்றும் பிரபல வர்த்தக நிலையங்களும், ஸ்தாபனங்களும் பெருமளவு பொருட்களை காங்கேசன்துறை, வல்வெட்டித்துறை மயிலிட்டி ஆகிய துறைகளிலிருந்து வள்ளங்கள மூலம் எடுத்துச் செல்ல தமிழ் இளைஞர் பேரவை உறுப்பினர்கள தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் [கா]

## வெளியூர்த் தபால்சேவை

(யாழ்ப்பாணம்)

இயற்கை அழிவுகாரணமாக தடைப்பட்டிருந்த வெளியூர்த் தபால்சேவை, இச்செய்தி அச்சுக்கு போகும்வரை சீராக வில்லை

அனுராதபுரத்திலிருந்து யாழ்பபாணத்துக்கு வெளியூர்த் தபால்பொதிகளை ஏற்றி வந்துகொண்டிருக்கும் விசேஷ தபால் 'வான்' இன்றுகாலை யாழ்ப்பாணம் வந்துசேருமென எதிர்பாக்கப்படுகிறது.

தபால்வான் யாழ்ப்பாணம் வரும்பட்சத்தில் வெளியூர்த் தபால்விநியோகம் இன்று காலை நடைபெறலாமென்று யாழ் தபால்அதிகாரி ஒருவர் நேற்றிரவு தெரிவித்தார். (கெ)

## குற்றச்சாட்டு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

த்து

நீதியரசர் திரு. தெதரகொடவைத் தாம்பயமுறுத்த முயற்சிக்கவில்லை என்று திரு. கொப்பேகடுவ தமதுவிளக்கத்தில் தெரிவித்திருந்தார்.

திரு கொப்பேகடுவ நீதியரசரை தொலைபேசியில்அழைத்ததற்கு முன்னுள் நீதி-நிதி அமைச்சர் திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா காரணம் என திரு தெதரகொட தமது சாட்சியத்தில் கூறியதையும் ஆணைக்குழு நம்பவில்லை என்றும் ஆணைக்குழு தனது தீர்ப்பில் தெரிவித்திருந்தது. (இ)

## உருக்குலைந்த...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இலவச பங்கீடுட் உணவுப்பொருள்களை வழங்கத் தற்காலிக விநியோக நிலையங்கள் பல அமைக்கடபட்டுள்ளன

கொழும்பிலிருந்து நூற்றுக்கணக்கான லொறிகளில் உணவுப் பொருட்கள் மட்டக்களப்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நேற்று பொலன்நறுவ, மட்டக்களபபு அம்பாறை ஆகிய மாவட்டங்களுக்கு உணவுப பொருள்களுடன் ஏராளமான மருந்துவகைகளும் அனுபபி வைக்கபபட்டன. பாதுகாபபு படையினர் சேவையிலீடுபடுத்தப்பட்டுள்ளனர்

சர்வதேச ஸ்தாபனங்களும் வெளிநாட்டு அரசாங்கங்களும் தாராளமாக உதவியளித்து வருகின்றன அமெரிக்கா 25,000 டாலர் மதிப்புள்ள மருந்துவகைகளையும் 1,500 கூடாரங்கள், 19,000 போர்வைகள் மற்றும் மண்வெட்டிகள், கோடரிகள் ஆகிய வற்றை அனுப்பிவைத்துள்ளன. இவை இன்று இலங்கை வர்துசேரும். ஐ நா. அபிவிருத்தி ஸ்தாபனம் மற்றும் சில ஸ்தாபனங்கள் கூடடாக நேற்று 68 000 அமெரிக்க டாலர்களை இலங்கைக்கு அனுப்பிவைத்துள்ளன

### குடிநீர்ப் பிரச்னை

மட்டக்களபபில் வெள்ளத்துடன் கடல்நீர் சேர்ந்துவிட்டதால் குடிநீர்பபிரச்னை ஏற்பட்டுள்ளது கிணற்றுநீர் உவர்நீராக மாறியுள்ளது.

பராக்கிரம அணைக்கட்டின் நீர்மட்டம் உயராததினல் பீதி ஏற்படாதபோதிலும், வெள்ளத்தினல் இப்மாவட்டம் பாதிக்கப்பட்டுள்ளது. தப்புள்ள, மன்னப்பிட்டிய வெள்ளத்தில் மூழ்கியுளளது.

# தமிழ் இளைஞர் பேரவை பரவலான ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் பொருட்டு தமிழ் இளைஞர்பேரவை தனது பணிகளைப் பரவலாக்கியுள்ளது.

நேற்று யாழ் பஜாரில் நிதிசேகரிப்பு நடைபெற்றது. திருவாளர்கள் செந்துராசா, நித்தியானந்தன் ஆகியோர் இதற்குத் தலைமைதாங்கினர்.

நிதிசேகரிப்பிற்கு பஜாரில் பேரவை ரசீதும் வழங்கியதாகவும் இரண்டொரு தினங்கள் இந்நிதிசேகரிப்பு நடைபெறுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

தொகுதி ரீதியாகவும் வட பகுதியில் இளைஞர் பேரவை அந்தந்தத்தொகுதி அமைப்பாளர்கள் ஊடாக நிதிசேகரிக்கவுள்ளது.

இதன் பொருட்டு சகல வட பகுதி தொகுதிகளையும்சேர்ந்த உறுப்பினர்களையும் அமைப்பாளர்கள் ஊடாக யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள தலைமைப்பீடத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கூடியவரை உணவு, உடை என்பவற்றை தொகுதிகள் தோறும் சேகரித்து தலைமைப் பீடத்திடம் ஒப்படைக்குமாறு உறுப்பினர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

தொகுதிகளில் நிதி சேகரிப்பதற்கு தொகுதி அமைப்பாளர்களுக்கு அதிகாரமளிக்கப் பட்டுள்ளது. உறுப்பினர்கள் அமைப்பாளர்களிடம்பேரவையின் கடிதப்படிவப்பட்டியலுடன் சென்றுதான் நிதி சேகரிக்க முடியுமெனத்தெரிவிக்கப் பட்டது.

இதற்கான சகல நேரடி மேற்பார்வை ஏற்பாடுகளையும் பேரவையின் அமைப்புச் செயலாளர் திரு. ரி. சந்ததியார், நிர்வாகச் செயலாளர் திரு. எஸ். யோகநாதன், பொருளாளர் திரு பரமசாமி ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

இதற்கு நிதியுதவி அளிக்கவிருக்கும் தனிப்பட்டோர் வர்த்தக ஸ்தாபனங்களை யாழ் ஸ்ரான்லி வீதியிலுள்ள தமிழ் தொழிற்சங்கக்கூட்டணி அலுவலகத்தில் பேரவையுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (உ)

### விரிவுரைகள் ரத்து

[கோண்டாவில்]

யாழ் வளாக மாணவர்களின் விரிவுரைகள் எதிர்வரும் திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பமாகும்.

யாழ் வளாக மாணவர்கள் மட்டக்களப்புப் பகுதி மக்களுக்கு உதவிசெய்யச் சென்றுள்ளமையினுல் இவ்விரிவுரைகள் யாவும் ரத்துச்செய்யப்பட்டுள்ளன.

இத்துடன் யாழ். வளாக மாணவ மன்றத் தலைவர் எஸ். ஜெயபாலன் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திரு. ஜெயபாலன் இவ்வாரம் விரிவுரைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவித்தார். மேலும் இக்கூட்டத்தில் மற்றைய மாணவ மன்றங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் வெள்ளத்தினுலும் புயலினுலும் சிக்குண்டவர்களுக்கு உதவி செய்யவேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டி ஒவ்வொரு மாணவர்களும் இதற்கு உதவி செய்யவேண்டும் எனக் கேட்டுக்கொண்டனர்.

யாழ். வளாக மாணவர்களுக்கு கடன்வசதி பெற தகுதியானவர்களின் பெயர்ப் பட்டியலும் அறிவிக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிசெய்வதற்காக இப்பணத்தில் இருந்து 10 ரூபா வீதம் உதவி செய்யும் படி மாணவ மன்றத்தலைவர் கேட்டுக்கொண்டார் இதே நேரத்தில் கடன்வசதி பெருத மாணவர்களும் இந்நிவாரண நிதிக்கு தம்மால் இயன்றளவு உதவிகளைச் செய்யும்படியும் மாணவ மன்றத் தலைவரினுல் கேட்கப்பட்டுள்ளனர். இதன்பிரகாரம் மாணவர்கள் நிவாரண உதவிகள் செய்கின்றனர். [உ]

## உதைபந்தாட்டம்

### சென். நீக்கிலஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவில், யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே 'நொக்கவுட்' உதைபந்தாட்டப் போட்டி தற்போது யாழ். விளையாட்டரங்கில் ஆரம்பமாகியுள்ளது இப்போட்டியில் மொத்தம் 15 கழகங்கள் கலந்து கொள்கின்றன.

நேற்று நடைபெற்ற போட்டியில் நாவாந்துறை சென் நீக்கிலஸ் கழகம் கிறீன்பீல்ட் கழகத்தை 3—2 கோல்களால் வெற்றிபெற்றது.

இன்றைய போட்டி

இன்று நடைபெற இருக்கும் போட்டியில், பொற்பதி கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் கழக 'பி' பிரிவுக் கோஷ்டிமோதும்.

## டிப்ளோமாப் பயிற்சி:

# முதலாம் வருட மாணவர் விரிவுரை நடைபெற்றது

[கோண்டாவில்]

தபால் மூலம் அமைந்த தேசிய உயர்தர முகாமை டிப்ளோமா பயிற்சி நெறியின் முதலாம் வருட மாணவர்களுக்கானவிரிவுரைகள் நேற்று யாழ்ப்பாணம் பல் தொழில் நுட்ப நிறுவனத்தில் நடைபெற்றது.

இது இப்பயிற்சிநெறி ஆரம்பிக்கப்பட்ட இரண்டாம் பகுதி மாணவர்களின் விரிவுரையாகும் இத்துறைக்கு இம்முறை கடந்த முறையைப் போன்று வேலையற்ற மாணவர்களுக்கு அனுமதி கிடைக்கப்பெறவில்லை.

இம்முறை தெரிவுசெய்யப் பட்டவர்கள் யாவரும் ஊழியர்களாகவே காணப்படுகின்றனர்.

நேற்று ஆரம்பிக்கப்பட்ட விரிவுரை வகுப்புகளுக்கு சுமார் 12 பேர்வரையில்தான் சமுகமளித்திருந்தனர். ஆனல் இப் பயிற்சிநெறிக்கு பலபேர் அனுமதிக்கப்பட்டும் விரிவுரைக்கு மேற்கூறப்பட்ட தொகையினரே சமூகம் அளித்திருந்தனர். இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் 1976ம் ஆண்டு வெளியாகிய க. பொ. த. உயர்தர பரீட்சை பெறுபேறுகளுடன் இவர்கள் இப் பயிற்சி நெறிக்கு அனுமதிக்கப் பட்டனர்.

இத்துடன் தொடர்ந்து இரண்டாம் வருட மாணவர்களுக்கும் விரிவுரைகள் யாழ்ப்பாணம் பல்தொழில் நுட்ப நிறுவனத்தில் நடைபெற்று வருகின்றது. இரண்டாம வருட மாணவர்களுக்கான இரண்டாம் வருடப் பரீட்சை எதிர்வரும் தை மாதத்தில நடைபெறும் எனவும் மாணவர்களுக்கு தொலைக்கல்வி நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. [உ]

## இடமாற்றம்

(சங்கானை)

சங்கானை விறகு காலையில் கடந்த பல வருட காலமாக முகாமையாளராகக் கடமையாற்றிய திரு எஸ். கனகநாயகம் சேவையிலிருந்து ஓய்வு பெறுவதையொட்டி திரு. எஸ். ரவரத்தினராஜா யாழ்ப்பாணம் விறகு டிப்போவிலிருந்து சங்கானைக்கு இம்மாதம் முதல் இடமாற்றம் பெற்றுள்ளார். (உ)

# "மாணவர் தம் உள்ளங்களை தூய்மைப்படுத்திக் கொள்ளவேண்டும்

## ஓய்வுபெறும் ஆசிரியர் புத்திமதி

(யாழ்ப்பாணம்)

'மாணவர்களாகிய நீங்கள் அழிவில்லாப் பெரும் செல்வத்தைத் தேட விரும்புகின்றீர்கள். இதற்கு இளம் உள்ளங்களைக்கொண்ட நீங்கள் உங்கள் உள்ளங்களைத் தூய்மையையும் பிறர் உள்ளங்களில் கருணை கொள்ளும் இயல்பையும் வளர்த்துக்கொள்ள வேண்டும்"

இவ்வாறு தமக்கு அளிக்கப் பட்ட பிரிவுபசார விழாவிற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் ஆசிரியர் திரு எஸ். கே துரைராசா குறிப்பிட்டார்.

இவ்வாசிரியர் தமது இளம் வயதில் பார்வைப் புலனை இழந்தபோதிலும் உயர் வகுப்புகளில் பௌத்த விஞ்ஞானம் போதிக்கும் ஆசிரியராக கடந்த 26 ஆண்டுகளாக சுன்னுகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் சேவையாற்றி வந்துள்ளார்.

ஆசிரியர் திரு. துரைராசாவின் சேவையைப் பாராட்டி ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களால் அண்மையில் அவருக்கு மேற்படி பிரிவுபசார விழா நடாத்தப்பெற்றது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978ம் ஆண்டு நவம்பர் மாதம் 28ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

The Eelanaadu Post Box No. 49, Telegram Eelanaadu Telephone: 289, Registered as a Newspaper in Sri Lanka.